විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ඓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. } ஓய்வூ/சுற்றறி/2010 දිනය / திகதி / Date } 01.12.2010

ஓய்வூதிய சுற்றுநிருபம் 11/2010

செயலாளர், அரச பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு,
மாவட்டச் செயலாளர்கள் / பிரதேசச் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர் அனைவருக்கும்,

## பொலிஸ் அதிகாரிகளுக்கான நலிவு ஓய்வூதியம் வழங்குதல்

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அல்லது சட்ட ரீதியான கடமைகளை நிறைவேற்றுகையில் நலிவு நிலைக்குட்படும் பொலிஸ் அதிகாரிகளுக்கு நலிவு ஓய்வூதியமொன்றினை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இவ் ஓய்வூதியத்தினை வழங்குகையில் கீழ்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாகின்றன.

1. கௌரவ அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட 13.10.2010 ஆம் திகதியில் இருந்தே நலிவு ஓய்வூதியம் வழங்கல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

2. நலிவு ஓய்வூதியம் வழங்குகையில் நட்டஈட்டு ஓய்வூதியம், காயக் கொடுப்பனவுகள் மற்றும் பொலிஸ் நட்டஈடு என்பன உரித்தற்றதாவதுடன், இவ்வாறான கொடுப்பனவுகள் 13.10.2010 ஆந் திகதியின் பின்னர் நிறுத்தப்படல் வேண்டும்.

3. நலிவு ஓய்வூதியக் கணிப்பீடானது, உழைக்கும் திறன் குறைவடையும் சதவீதத்தின் அடிப்படையில், கீழ்வரும் அட்டவணையினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

| பதவி நிலை | உழைக்கும் திறன் குறைவடையும் சதவீதத்தின் அடிப்படையில் வழங்குதல் (வருடாந்தம்) ரூ. | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 20% | 30% | 40% | 50% | 60% | 70% | 80% | 90% | 100% |
| பொலிஸ் கான்ஸ்டபிள் | 305.00 | 445.00 | 590.00 | 730.00 | 870.00 | 1010.00 | 1155.00 | 1295.00 | 1435.00 |
| பொலிஸ் சார்ஜன்/ சார்ஜன் மேஜர் | 330.00 | 470.00 | 615.00 | 755.00 | 895.00 | 1035.00 | 1180.00 | 1320.00 | 1460.00 |
| உப பொலிஸ் பரிசோதகர்/பொலிஸ் பரிசோதகர் | 585.00 | 875.00 | 1165.00 | 1460.00 | 1750.00 | 2040.00 | 2335.00 | 2625.00 | 2915.00 |
| பிரதான பொலிஸ் பரிசோதகர் | 665.00 | 1000.00 | 1335.00 | 1665.00 | 2000.00 | 2335.00 | 2665.00 | 3000.00 | 3335.00 |
| உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் | 835.00 | 1250.00 | 1665.00 | 2085.00 | 2500.00 | 2915.00 | 3335.00 | 3750.00 | 4165.00 |
| பொலிஸ் அத்தியட்சகர் | 1000.00 | 1500.00 | 2000.00 | 2500.00 | 3000.00 | 3500.00 | 4000.00 | 4500.00 | 5000.00 |
| சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் | 1165.00 | 1750.00 | 2335.00 | 2915.00 | 3500.00 | 4085.00 | 4665.00 | 5250.00 | 5835.00 |
| பிரதிப் பொலிஸ் மாஅதிபர்/சிரேட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் | 1335.00 | 2000.00 | 2665.00 | 3335.00 | 4000.00 | 4665.00 | 5335.00 | 6000.00 | 6665.00 |
| பொலிஸ்மா அதிபர் | 1500.00 | 2250.00 | 3000.00 | 3750.00 | 4500.00 | 5250.00 | 6000.00 | 6750.00 | 7500.00 |

| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

4. நலிவு ஓய்வூதியத்தினைக் கணிப்பிடுகையில், உழைக்கும் திறன் குறைவடையும் சதவீதமானது வைத்திய ஆய்வு சபையினால் திட்டமாகக் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில், குறித்த அலுவலரை மீண்டும் வைத்திய ஆய்வு சபையொன்றில் முன்னிறுத்தி அச்சதவீதத்தினைத் திட்டமாகத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

5. பொலிஸ் அதிகாரிகளுக்கு ஓய்வூதியமொன்று வழங்கப்படுமாயின், இந்நலிவு ஓய்வூதியத்தினை குறித்த சம்பள மாற்றங்களுடன் கணிப்பிட்டு அவ் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குதல் வேண்டும்.

6. குறித்த மாதிரிப்படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், பொலிஸ் நலன்புரிப் பிரிவின் பணிப்பாளரினால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் நலிவு ஓய்வூதியத்தினைக் கணிப்பிட்டு, கொடைப்பத்திரங்களைத் தயார் செய்து, எனக்கோர் பிரதி சகிதம் பிரதேச செயலாளர்களிடம் அனுப்ப பொலிஸ் நலன்புரிப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வேறு ஓய்வூதியமொன்றிருப்பின் இக்கோவையினை குறித்த கோவையுடன் ஒருங்கிணைக்க பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7. நலிவு நிலைகள் தொடர்பில் குறித்த காலவரையறையொன்று காட்டப்பட்டிருப்பின் அக்கால இறுதியில் மீண்டும் வைத்திய ஆய்வு சபையொன்றில் முன்நிறுத்த பிரதேச செயலாளர்கள் படிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:-

1. ஜனாதிபதி செயலாளர்
2. அமைச்சரவையின் செயலாளர்
3. செயலாளர் - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
4. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகம்

## பொலிஸ் அதிகாரிகளுக்கான நலிவு ஓய்வூதியம் வழங்குதல் (விண்ணப்பம்)

**01. பொலிஸ் அலுவலர் பற்றிய விபரங்கள்**

1.1 முழுப்பெயர் ..........................................................

1.2 பிறந்த திகதி ..........................................................

1.3 பால் ..........................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் ..........................................................

1.5 சொந்த முகவரி ..........................................................

..........................................................

..........................................................

1.6 தொலைபேசி இலக்கம் ..........................................................

**02. சேவை விபரங்கள்**

2.1 பதவி மற்றும் சேவை இலக்கம் ..........................................................

2.2 இறுதி சேவை நிலையத்தின் முகவரி ..........................................................

..........................................................

..........................................................

2.3 சேவைக்காலம் (.......................... திகதி முதல் ........................ வரை)

**03. நலிவு நிலை பற்றிய விபரங்கள்**

3.1 நலிவு நிலைக்குள்ளான திகதி ..........................................................

3.2 நலிவு நிலை ஏற்படக் காரணம் ..........................................................

3.3 வைத்திய சபை அறிக்கையின் படி நலிவு நிலையின் சதவீதம் ..............................

3.4 நலிவு நிலை இருக்க இயலுமான கால எல்லை ..............................................

3.5 ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2010 இன் படி நலிவு ஓய்வூதியம்:
வருடாந்த .................................. மாதாந்த ..............................................

**04. ஓய்வூதிய அனுகூலங்கள்**

4.1 சிவில் ஓய்வூதியம் பெறின் இலக்கம் மற்றும் பிரதேச செயலகம் ............................

4.2 நட்டஈட்டு ஓய்வூதியம் பெறின் இலக்கம் மற்றும் பிரதேச செயலகம் ....................

4.3 காயக் கொடுப்பனவுகள் பெறப்படுகின்றதா என்பது பற்றி .....................................

4.4 பொலிஸ் நட்டஈடு பெற்றிருப்பின் விபரங்கள் ...................................................

மேற்குறித்த விபரங்கள் உண்மை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். வைத்திய சபை அறிக்கை மற்றும் ஆய்வுச் சபை அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த அலுவலருக்கு பொலிஸ் நலிவு ஓய்வூதியமொன்றினை வழங்க விதந்துரைக்கின்றேன்.

பணிப்பாளர்
பொலிஸ் நலன்புரிப்பிரிவு

ஓய்வூதியம் 3
ஓய்வூதிய இலக்கம் - ஓய்வூ/பொலிஸ் நலிவு/.........
உமது இலக்கம்:
ஓய்வூதியத் திணைக்களம்
கொழும்பு 10
20.................. மாதம் ............... திகதியில்.

பிரதிகள் :-

1. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் (பதிவேட்டறை)
2. கணக்காய்வாளர் நாயகம்
3. பிரதேச செயலாளர் .................................. (உப பிரதி சகிதம்)
4. நலிவு ஓய்வூதியதாரி

தலைப்பு – பொலிஸ்மா அதிபர்

## <u>பொலிஸ் நலிவு ஓய்வூதியம் வழங்கல் (கொடைப்பத்திரம்)</u>

.........................................................................................................

.................................. இலக்கம் மற்றும் ..................... 20........ ஆந் திகதி கொண்ட உமது/எனது கடிதம் தொடர்பானது.

02. மேற்குறித்த நபருக்கு ..................... 20....... ஆந் திகதி முதல் ............ 20....... ஆந் திகதி வரை ஆண்டொன்றிற்கு ரூபாய் ......................................................................................... (ரூ.........................) வீதம் தற்போது வழங்கும் தொகைக்கே / தொகையினை விடவும் அதிகரித்து/குறைத்து நிரந்தர நலிவு ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்கிச் செல்லல் வேண்டுமென தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது கணக்காய்வாளர் நாயகத்தின் பரீட்சிப்புக்குட்பட்டது.

02.I. எவ்வாறெனினும், இவ் ஓய்வூதியம் 05 பெப்பிரவரி 1934 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் 05 மே 1972 ஆந் திகதி கொண்ட திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 31 ஆம் வாசகத்திற்குத் திருத்தி உள்ளடக்கப்பட்ட "இ" வாசகத்திற்கு இசைவாக அமைதல் வேண்டும்.

3. ஓய்வூதியம், ........................................ பிரதேச செயலகத்தினில் வழங்கப்படும், பணத்தினைப் பெற்றுக்கொள்ள அங்கு/இங்கு வரும்படி அதனைப் பெறுபவரிற்கு அறிவித்தல் வேண்டும்.

.................................................................................
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக

## வழங்கல் அதிகாரிக்கான அறிவுறுத்தல்கள்

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,

.....................................................

மேற்குறித்தவாறு பணத்தினைக் கொடுப்பனவு செய்யும் படி உங்களிடம் வேண்டப்படுகின்றது. முதற் கொடுப்பனவிற்காக வேண்டி தயார் செய்யப்படுகின்ற உறுதிச் சீட்டிற்கு, இக்கடிதத்தில் இத்துடன் அனுப்பப்படுகின்ற உப பிரதியினை இணைத்தல் வேண்டும்.

02. ஓய்வூதியத் திணைக்களத்தின் முன் அனுமதியினைப் பெறாது .......................... 20.......... ஆம் திகதியின் பின்னர் எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ளல் கூடாது.

03 பயங்கரவாத அல்லது சட்டத்தினை அமுல்படுத்துகையில் வலது குறைந்த நிலைக்கு உட்படுபவர்களுக்கு நலிவு ஓய்வூதியம் வழங்கப்படுமாயின், 13.10.2010 ஆந் திகதியின் பின்னர் நட்டஈட்டு ஓய்வூதியம், காயக் கொடுப்பனவுகள் மற்றும் பொலிஸ் நட்டஈடு என்பன உரித்தற்றதாவதுடன், அவ்வாறான கொடுப்பனவுகள் இருப்பின், அத்தினத்திலிருந்து அவற்றினை நிறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. சிவில் ஓய்வூதியம் வழங்கப்படுமாயின் அதனை இவ் ஓய்வூதியத்துடன் ஒருங்கிணைத்து (சம்பள மாற்றங்களுடன்) வழங்குதல் வேண்டும்.

..................................................................
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக

---

### <u>நலிவு ஓய்வூதியக் கணிப்பீடு</u>

நலிவு நிலைக்குட்பட்ட திகதி ........................................................

உரித்தான நலிவு ஊதியம் - மாதாந்த ........................................................

13.10.2010 வரை மாற்றப்பட்டதன் பின்னரான ஊதியம் ........................................................